IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 36/2026 - PW-2

| | |
|---|---|
| Name | திரு. மனோகரன் |
| Husband/Father Name | ஆளவட்டான் |
| Village /Area | சிறுனமல்லி |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 65 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.07.2026.

**(எதிரிகள் 1, 3 மற்றும் 5 ஆஜர். எதிரி 4 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரி பொன்னுரங்கம் என் உடன் பிறந்த தம்பி. 3ம் எதிரி சுரேஷ் என் தம்பியின் மகன். 5ம் எதிரி என் தம்பி மருமகள். சம்பவம் குறித்து என் மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எங்கள் இருவருக்கிடையே வாய் தகராறு ஏற்பட்டது வேறு ஒன்றும் இல்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே சொத்து பிரச்சினை இருந்து வந்ததாகவும் 06.07.2023ந் தேதி எங்களது சித்தப்பா பேரன் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட போது எனது தம்பி பொன்னுரங்கம் குடும்பத்தாரும் கலந்து கொண்டதாகவும் அதில் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் சமாதானம் செய்து வைத்ததாகவும் அதன் பிறகு 07.07.2023ந் தேதி பகல் 02.00 மணியளவில் எனது மகள் வீட்டின் வெளியே நின்று இருந்த போது என் தம்பி பொன்னுரங்கம் அவர்களின் மகன்கள் சதிஷ் மற்றும் சுரேஷ், சித்தி ரோஸ் ஆகியோர் என் வீட்டின் அருகே வந்து எதிரி சதீஷ் சரவணனை கெட்ட வார்த்தையால் திட்டி கையால் முகத்தில் அடித்ததாகவும், பின்பு சுரேஷ் மற்றும் பொன்னுரங்கம் என்னை கையால் முகத்திலும், முதுகிலும் சரமாரியாக அடித்ததாகவும், பிறகு

எனது தம்பி மனைவி ரோஸும், அவரது மருமகள் வடிவுக்கரசியும் என் மகளின் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் அவர் முகத்தில் அடித்ததாகவும், அதனை தொடர்ந்து என் மூத்த மகளின் கணவரின் TN73 C2436 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda இருச்சக்கர வாகனத்தை எதிரிகள் சதிஷ் மற்றும் சுரேஷ் கீழே தள்ளி உடைத்ததாகவும், அந்த வாகனத்தின் மதிப்பு ரூ.20.000/—என்றும், பின்பு நாங்கள் பயந்து வீட்டிற்கு சென்று விட்ததாகவும், அதன் பிறகு மேற்படி ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டின் மீது கற்களை எறிந்து வீட்டின் சிமெண்ட ஷீட்டை உடைத்து விட்டதாகவும், பிறகு ஊர்காரர்கள் வந்து ஆஜர் எதிரிகளை தடுத்து அழைத்து செல்லும் போது இனிமேல் எங்களிடம் வைத்து கொண்டால் உங்களை ஒழித்து விடுவோம் என மிரட்டியும், கெட்ட வார்த்தையால் திட்டியும் சென்றதாகவும், காயம்பட்ட நானும், எனது மகளும் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், எனது மகன் சரவணனுக்கு காயம் எதுவும் இல்லை என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நிலத்தகராறு பிரச்சினை குறித்து எதிரிகள் தரப்பில் எங்களுக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டு அந்த வழக்கில் நாங்களும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.20 18:29:20 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.